“அப்படியா! சரி, நம்முடைய நீண்ட கழுத்தால் என்ன பயன்?” என்று மிகுந்த மகிழ்ச்சியோடு சோனு கேட்டது.

“நமது கால்கள் நீளமாக இருக்கின்றன. அதனுல், கழுத்தும் நீளமாகத் தானே இருக்க வேண்டும்? இல்லாதுபோனுல் எப்படி நாம் நிலத்தில் உள்ளதை எடுப்போம்? மேலும், நம்முடைய நீளமான கழுத்து உயரமான மரங்களில் உள்ள இலைகளைப் பறிக்கவும், வெகு தூரம் பார்க்கவும் உதவுகிறது. நம்முடைய திமில், நீளமான கால்கள், தட்டையான பாதம், நீண்ட கழுத்து - எல்லாமே நமக்கு மிகவும் பயன்படுகின்றன. அவைகளுக்காக நீ பெருமைப்பட வேண்டும்” என்று பதில் கூறியது அம்மா.

இப்போது, சோனு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தது. அம்மா தனக்காக ஒடித்து வைத்திருந்த பசுமையான இலைகளையெல்லாம் சோனு தின்றது. பிறகு அது தூங்கி விட்டது.

